தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.29

# Objectives and Etymology of Endowed Lands: A Study Based on Epigraphic Evidence

**Dr.P.Deepa***,
Assistant Professor and Head, Dept of History,
Sri Ram Nallamani Yadava Arts and Science College , Tenkasi – 627804.
*Correspondence: deeluxmathi@gmail.com.

**Article Info:** Received on 15-April-2026, Revised on 29-May-2026, Accepted on 11-June-2026.

## ABSTRACT

There is no doubt that the word 'Tamil' itself represents the first language of the world. Tamil life encompassed not merely language, but every aspect of existence—civilization, education, culture, politics, society, individual dignity, economics, and astronomy—within the singular framework of spirituality. They considered the worship of the Divine and the act of making offerings associated with it to be the foundation of such a life. It could only have been the Tamils who introduced the practice of making such offerings in so many different forms. The objective of this study is to elucidate the purposes and underlying reasons for the endowment lands granted in this manner. Based on temple inscriptions, this study examines details regarding the purpose, donors, and timing of these endowment lands, as well as the identities of the recipients. Endowment lands have been granted for a wide range of purposes, including the maintenance of the temple's presiding deities and minor deities; the provision of food offerings and floral garlands; the upkeep of sanctums; the services of musicians and conch-blowers; temple renovation and construction works; medical services; the worship of attendant deities; the lighting of lamps; the conduct of festivals; the remuneration of temple staff; and the support of ascetics. The conclusion of the study also addresses whether any such lands, granted under specific conditions, still exist today. The objective of this study is to ensure that the current generation learns about the temples—which continue to reflect the greatness of our ancestors even after centuries—and the epigraphic evidence found within them. The objective of this study is to ensure that the current generation learns about the temples and the epigraphic evidence found within them. which continue to reflect the greatness of our ancestors even after centuries.

**Keywords:** *Puram, Nivantham, Thiruppani, Kaani, Iraiyili.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)* www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

# நிவந்த நிலங்களின் நோக்கங்களும் அதன் காரணப் பெயர்களும் - கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையில் ஒரு ஆய்வு

*முனைவர்: பொ.தீபா., உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
ஸ்ரீ ராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
தென்காசி – 627804.

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் என்னும் சொல்லே தரணியின் முதல் மொழிச் சொல்லாக இருக்கும் என்பதில் ஐய்யமில்லை. மொழியால் மட்டுமில்லாமல் நாகரீகம், கல்வி, பண்பாடு, அரசியல், சமூகம், தனிமனித மாண்பு, பொருளாதாரம், வானவியல் சாஸ்திரம் என அனைத்தையும் ஆன்மீகம் என்னும் ஒற்றை இயக்கத்துக்குள் அடக்கியது தமிழர் வாழ்க்கை. அத்தகைய வாழ்க்கையின் அடிப்படையாக அவர்கள் கருதியது இறை வழிபாடும் அதற்கான தானங்களும் தான். தானங்களையும், இத்தனை வகைகளில் வழங்கலாம் என்று அறிமுகப்படுத்தியவர்களும் தமிழர்களாகத் தான் இருக்க முடியும். அவ்வாறு வழங்கப்படும் நிவந்த நிலங்களின் நோக்கங்கள் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு இந்த நிவந்த நிலங்கள் எதற்காக, யாரால், எப்போது வழங்கப்பட்டது, நிவந்தங்களைப் பெறுபவர்கள் யார், என்ற தகவல்களுடன் ஆய்வு அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் மூலவர்கள், சிறு தெய்வங்கள், அமுது படையல்கள், மலர் மாலைகள் சாற்றுதல், கருவறை தெய்வங்கள், இசைக் கருவி இசைப்பவர்கள், சங்கு முழங்குபவர்கள், கோயில் திருப்பணிகள், மருத்துவம் பார்ப்பவர்கள், பரிவாரத் தெய்வங்களின் வழிபாடுகள், விளக்கு எரிக்க, திருவிழாவுக்காக, கோயில் பணி செய்பவர்கள், துறவிகள் எனப் பலதரப்பட்ட காரணங்களுக்காகவும் நிவந்த நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு வழங்கப்பட்ட நிவந்த நிலங்கள் தற்போது ஏதேனும் இருகின்றனவா என்ற அடிப்படையிலும் ஆய்வின் இறுதியில் சொல்லப்பட்டுள்ளது. நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் நமது முன்னோர்களின் மாண்பை எடுத்துச் சொல்லும் வகையில் இருக்கும் கோயில்களும், அவற்றின் கல்வெட்டு சான்றுகளைப் பற்றியும் தற்போதைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** புறம், நிவந்தம், திருப்பணி, காணி, இறையிலி.

**முன்னுரை:**

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். - குறள் (214)

உலக வாழ்வியல் முறைகளை அறிந்து அடுத்தவர்களின் தேவைகளைப் புரிந்து அதற்கு ஏற்றார் போல் வாழ்பவர்களே இந்த உலகில் உயிரோடு வாழ்பவர்களாக கருதப்படுவார்கள், மற்றவர்கள் எல்லாம் இறந்தவர்களுக்குச் சமமானவர்கள். வள்ளுவப் பெருமானின் இந்த பொன் மொழியின் தன்மை அறிந்தே தமிழ் முதுகுடிகள் ஒரு பொதுகாரியம் நடக்கும் போது அதில் ஈடுபடும்

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

அனைவரின் நலம் அறிந்தே அவர்களுக்கும் அவர்கள் தலைமுறையினருக்கும் நலம் பயக்கும் வகையில் தானங்களை செய்துள்ளனர்.

நாடு, அரசன், மக்கள், ஊர்ச்சபை என அனைத்தையும் தனக்குள் கொண்டிருந்த சமூகத்தின் மையமாக விளங்கியவை தமிழகக் கோயில்கள். அத்தகைய கோயில்களின் அன்றாட செயல்பாடுகள் இடையூறு இன்றி முழுமையாகச் செயல்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் ஆளுமையில் சிறந்து அறத்தில் உயர்ந்த தமிழ் சான்றோர்கள் கோயில்களின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் தனித்தனியாக வழிவகை செய்துள்ளனர். கோயில்களில் வழிபாடு என்பது தங்களின் அன்றாட கடமை என்று நினையாது இறைவனோடு நேரடி தொடர்பு கொள்ளும் இணையற்ற செயல் என்று நினைத்தனர். அவ்வகையில் கோயில்களின் அன்றாட வழிபாடுகளான திருமஞ்சனம், அமுதுப்படி, சாத்துப்படி, சந்தி விளக்குகள், திருப்பள்ளித்தாமம், நொந்தா விளக்குகள், திருவீதி உலா எழுந்தருளல், திருவிழாக்கள், இசைக் கருவிகள் இசைத்தல், திருமந்திர போனகம், ஆடல் பாடல் நாடக அரங்கேற்றங்கள் என பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. வழிபாடுகளின் ஒரு பகுதியாக விளங்கும் இந்த நிகழ்வுகள் முறையாகவும், தடை இன்றி செயல்படும் பொருட்டு அப்பணிக்கு என பல்வேறு தானங்களை நிலமாகக் கொடுத்து பூசைகள் நடக்க ஏற்பாடு செய்துள்ளனர். அந்தணர் உள்ளிட்ட ஊழியர்களின் சீவனத்துக்காக வழங்கப்படும் இத்தகைய தானங்களை பெறுபவர்கள் தங்களின் கடமையை உணர்ந்து செயல்பட்டுள்ளனர். அத்தகைய தானங்களின் பெயர்கள், நோக்கங்கள், தன்மைகள், வகைகள் பற்றி சில கல்வெட்டு சான்றுகளின் அடிப்படையில் இந்த ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தானப்புறம்:**

கோயில்களுக்கு மன்னர், மக்கள் என பல்வேறு தரப்புகளில் இருந்தும் காணி, மா, குழி, என பல்வேறு அளவுகளில் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் அன்றாட பூசையின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் பொறுப்பேற்று செயல்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டவர்களுக்கு அல்லது வழிபாட்டிற்கு என தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் அல்லது ஊர்களுக்கு தானப்புறம் என்று பெயர். புறம் என்பது பொதுவான அல்லது சமூகம் அறிந்த வாழ்க்கையைக் குறிக்கும். அது இடமாகவோ அல்லது மக்களின் வாழ்க்கை முறையாகவோ இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தானமாக வழங்கப்படும் இடத்தின் காரணப் பெயரோடு புறம் என்னும் வார்த்தையும் சேர்ந்துள்ளது.

**தானப்புறத்தின் நோக்கம்:**

இத்தகைய நிவந்த தானங்களை தனிநபர்கள், கோயில் ஊழியர்கள் அல்லது கோயில்களுக்கு என மன்னர்களோ, தனிநபர்களோ, ஊர் சபையினரோ, நகரத்தார்களோ தானமாக வழங்குவர். தானமாகக் கொடுக்கப்படும் நிலங்கள் இரண்டு நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும். ஒன்று கோயில்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களின் ஊதியத்துக்கு மாற்றாகவும், மற்றொன்று அந்த நிலங்களில் இருந்து வரும் விளைச்சலை கோயிலின் வழிபாடுகளுக்காகவோ அல்லது திருப்பணிகளுக்காகவோ நியமத்தின் பொருட்டு வழங்கப்படும். தானங்களைப் பெறும் ஊழியர்கள் அந்த நிலங்களில் இருந்து வரும் வருவாயை தங்களின் வாழ்க்கை முதலீடாகக் கொண்டு, கைமாறாக தங்களுக்கு விதிக்கப்பட்ட கோயில் பணிகளை சிறப்புற செய்ய வேண்டும்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)* www.tamilmanam.in
*DOI:* https://doi.org/10.63300/tm12012026

**தானப்புறத்தின் வகைகள்:**

கோயில்களின் வழிபாட்டு நிகழ்வுகளுக்காக வழங்கப்படும் நிலக் கொடைகள் அவற்றின் நோக்கத்திற்கு ஏற்ப பலவகைப்படும். அதில் தேவதானம், பிடாரிப்பட்டி, திருப்பாவாடைப்புறம், திருநந்தவனப்புறம், நாடகப்புறம், திருஉண்ணாழிப்கைபுறம், உவச்சக்காணி, சாலைப்புறம், திருதேர்ப்புறம், சங்குப்புறம், புதுக்குப்புறம், வைத்தியப் போகம், காஷ்டகாரிப் பங்கு, திருக்கைக்கொட்டிபுறம், விளக்குப்புறம், திருவேட்டைப்புறம், திருநாமத்துக்காணி, திருவிடையாட்டம், காணியாட்சி, குடிநீங்கா தேவதானம், திருவிழாப்புறம், மடப்புறம், திருநந்தவனப்புறம், திருமடைப்பள்ளிப்புறம் என்ற வகைகளும் அடங்கும்.

**கல்வெட்டில் தானப்புறம்:**

தமிழகக் கோயில்களில் உள்ள சில கல்வெட்டுகளைச் சான்றுகளாகக் கொண்டு அதில் இடம் பெற்றுள்ள புறம் சார்ந்த நில நிவந்தங்களைப் பற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவதானம் (அ) தேவதான இறையிலி:**

சிவன் கோயில்களில் பூசைகள் தடையின்றி சிறப்பாக நடைபெறும் பொருட்டு மன்னனோ, சபையினரோ நிலங்களை தானமாக வழங்குவது தேவதானம் ஆகும். இறைவனுக்கான நிலம் என்பதால் வரி நீக்கப்பட்டு தேவதான இறையிலி நிலமாக வழங்கப்படும். இரண்டாம் இராஜேந்திர சோழனின் **3**ம் ஆட்சி ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலத்தில் உள்ள திருவீழிமிழலை கோயிலில், மன்னன் பிறந்த திருவாதிரை நட்சத்திர நாட்களில் திருவீழிமிழலை உடையாருக்கு திருவிழா நடத்தும் பொருட்டு, தேவதான இறையிலி நிலம் கொடுத்து அதை வரிப் புத்தகத்தில் எழுத ஆணையும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆணையை திருமந்திர ஓலை நாயகம், புறவரி திணைக் களத்து அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பின்பற்றியுள்ளனர்.

**பிடாரிப்பட்டி:**

பிடாரி என்பது கிராமப்புறங்களில் உள்ள சிறு தெய்வ வழிபாடு ஆகும். காளி துர்கை போன்ற உக்கிரமான தெய்வங்களை காவல் தெய்வங்களாக வழிபடும் முறையாகும். இந்த தெய்வங்களின் வழிபாடுகள் மற்றும் பூசைகளுக்காக கொடையாக வழங்கப்படும் நிலங்கள் அல்லது ஊர்களுக்கு பிடாரிபட்டி என்று பெயர். மன்னர்களின் காலங்களில் கோயில்களில் வழிபாடு நேரங்களில் இசைக் கருவிகளை இசைப்பது வழக்கம். இந்த பணியை செய்பவர்களுக்கு உவச்சன் என்று பெயர். இந்த உவச்சர்களே காலப்போக்கில் பிடாரி கோயில்களில் பூசாரியாக மாறியுள்ளனர். இன்றும் பல கோயில்களில் தலைமுறை பூசாரிகளாக பணியாற்றி வருகின்றனர். திருவள்ளூர் மாவட்டம் குத்தம்பாக்கத்தில் உள்ள துறையாத்தம்மன் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ள நிலத்திற்கு பிடாரிப்பட்டி என்று பெயர். மேலும் திருச்சி மாவட்டம் மருங்காபுரி வட்டத்தில் பிடாரிப்பட்டி என்பது வழக்கில் தோய்ந்து பிடாரப்பட்டி என்று மருவி உள்ளது. நாமக்கல் மாவட்டத்திலும் பிடாரிபட்டி என்ற ஊர் உள்ளது.

**திருப்பாவாடை புறம்:**

இறைவர்க்கு தூய வெண்மையான ஆடை விரிப்பின் மீது பெரும் அளவிலான அமுது உள்ளிட்ட படையலைக் கொடுக்கும் பூசை நிகழ்விற்கு திருப்பாவாடை என்று பெயர். இந்த நிவந்தத்திற்காக வழங்கப்படும் நிலங்களுக்கு திருப்பாவாடைப்புறம் என்று பெயர். திருவீழிமிழலை

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

கோயிலில் சுந்தர பாண்டியனின் 11ம் ஆட்சி ஆண்டில் அழகிய மணவாள பட்டன் உள்ளிட்டோர் **175** குழி நிலங்களை விலைக்கு வாங்கி ஊர் விலையாக எழுதி நாட்டு விலைப்படி ஸ்ரீமாஹேஷ்வரர்களிடம் இருந்து பணம் வாங்கிக் கொண்டு திருவீழிமிழலை உடையார்க்கு திருப்பாவாடைப்புறமாக நிலங்களை விற்றுக்கு கொடுத்துள்ளனர். மேலும் இந்த செய்தியை கல்லிலும் செம்பிலும் வெட்டி வைத்துள்ளனர்.

**நாடகப்புறம் அல்லது கூத்தாட்டுக்காணி:**

நாடகத்துக்காக தானமாக வழங்கப்பட்ட நிலம் நாடகப்புறம் அல்லது கூத்தாட்டுக்காணி ஆகும். தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் நல்லூரில் உள்ள கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் கல்வெட்டின் படி சோழ மன்னன் இரண்டாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் நல்லூர் பெருங்குறி மகாசபையினர் தேவரடியார் மாமதலையான நெற்றிக்கண் நங்கைக்கு, அவர் அரங்கேற்றும் அமர்நீதி நாயனார் நாடகத்துக்காக இரண்டு மா முக்காணி அளவுடைய நிலத்தை காசு கொள்ளா இறையிலி நிலமாக வழங்கியுள்ளனர். நிலத்தைப் பெற்றுக் கொண்ட நங்கைக்கு நிரந்தர வருமானம் கிடைப்பதோடு, கோயிலில் புராண நாடகமும் தடையின்றி நடைபெற வழிவகுத்துள்ளனர். மேலும் நங்கையால் ஆட இயலாத போது அவரே வேறு ஒருவரை ஏற்பாடு செய்ய வேண்டும் என நிபந்தனையும் விதித்துள்ளனர்.

**திருஉண்ணாழிகைப்புறம்:**

கோயில் கருவறையில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மன்னரோ, கோயில் சபையினரோ, ஊர்ச் சபையினரோ அவர்களின் சீவனத்துக்காக நிலங்களை தானமாக வழங்குவது உண்டு. அவ்வாறு வழங்கும் நிலங்களுக்கு திருஉண்ணாழிகைப்புறம் என்று பெயர். திருகருகாவூர் கோயிலில் சோழ மன்னன் கோப்பரகேசரிவர்மனின் **5**ம் ஆட்சி ஆண்டில் கௌசியன் மீசுனி, ஆயிரவன் மாறன், மாறன் சிங்கன், மாறன் குலதீபன், மாறன் கொற்றன் ஆகியோர் சேர்ந்து வடுகன் பிசங்கன், பிச்சமாதேவன் ஆகியோரிடம் இருந்து நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளனர். அந்த நிலத்தைத் திருகருகாவூர் ஆழ்வார்க்கு இருபது ஈழக்காசுகள் பெற்றுக் கொண்டு திருஉண்ணாழிகைப் புறமாக விற்றுள்ளனர்.

**உவச்சக் காணி:**

முதலாம் இராசராசனின் **16**வது ஆட்சி ஆண்டில் திருகருகாவூரின் முல்லை வனநாத சுவாமி கோயிலில், மத்திறல் வீரசோமன் என்பவர் இசைக் கருவி வாசிக்கும் பணி புரிந்துள்ளார். உவச்சர் எனப்படும் இவரின் இசைப் பணிக்காக கருகாவூர் சபையினர், உவச்சரும் அவரது உடன்பிறந்தார்களும் அனுபவித்துக் கொள்ளும் வகையில் நில தானம் வழங்கியுள்ளனர். பணிக்குரிய காணிக்கையாக நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு உவச்சக் காணி என்று பெயர்.

**சாலைப்புறம்:**

வேதம் ஓதும் (கல்விக் கற்றுக் கொடுக்கும்) பிராமணர்களின் உணவுக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு சாலைப்புறம் என்று பெயர். திருகருகாவூர் முல்லை வனநாத சுவாமி கோயிலில் முதலாம் இராசராசனின் **32**ம் ஆட்சி ஆண்டில் மன்னனின் அணுக்கியார் (வேலைக்காரன்) பட்டாலகன் மதுரவாசுகியார் என்பவர் நித்த வளநாட்டு கருகாவூர் மகாசபையாரிடம் இருந்து மண்ணின் **26**ம் ஆட்சி ஆண்டில் **40** காசுகள் கொண்டும், **28**ம் ஆட்சி ஆண்டில் **45** காசுகள் கொண்டும், **31**ம் ஆட்சி ஆண்டில் **110** காசுகள் கொண்டும் மூன்று இடங்களில் மொத்தமாக

ஒன்றேய் அரை மாவும் கொண்ட நிலங்களை விலைக்கு வாங்கி, ஐந்து பிராமணர்களின், இரண்டு வேலை உணவு, கறி, நெய், மோர், வெற்றிலை, பாக்கு என இவைகளுக்காக சாலைப்புறமாக கொடுத்துள்ளார். இதனை சாலைப் போகம் என்றும் பிற கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது.

**திருத்தேர்புறம்:**

கோயிலின் முக்கிய திருவிழாக்களில் ஒன்று திருத்தேர் விழாவாகும். இந்த திருத்தேர் விழாவிற்காக கொடுக்கும் நிலங்களுக்கு திருதேர்ப்புறம் என்று பெயர். நிலங்களில் இருந்து வரும் வருவாய் கொண்டு திருதேர்த் திருவிழா நடைபெறும். தஞ்சாவூர் மாவட்டம் திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள கல்வெட்டில் கோயில் தேவகன்மி, பந்மாகேஸ்வர கண்காணிகள், ஸ்ரீகாரியத்தார்கள், சமையல் செய்யும் பெண்டிர்கள் என அனைவருக்கும் சேர்த்து திருவிழாக் காலங்களில் ஆகும் செலவுகளுக்காக திருதேர்ப் புறமாக வழங்கப்பட்ட நிலத்திற்கு மாற்றாக வேறு நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்ட செய்தி இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் திருத்தேர் புறமாகவும் இடம் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

**சங்குப்புறம்:**

தஞ்சாவூர் மாவட்டம் திருகருகாவூர் முல்லைவனநாத சுவாமி கோயிலில் பத்தூர் கிழான் மைந்தன் அரங்காலையன் என்பவர் முதலாம் இராசாதிராசனின் **17**வது ஆட்சி ஆண்டில் திருகருகாவூர் மகாதேவர்க்கு நடக்கும் வழிபாடுகளின் போது சங்கு இசைக்கும் பொருட்டு அதற்காக அரைகால் நிலம் ஒன்றும், ஒரு மா நிலம் ஒன்றும் இறை நீக்கி கொடுத்துள்ளார். இதன் வருவாயில் வரி போக மீதம் கொண்டு சங்கு இசைக்க வழிவகை செய்துள்ளார்.

**புதுக்குப்புறம்:**

சைவ, வைணவ கோயில்களின் அன்றாட செயல்பாட்டுக்காக நிலங்கள் தானமாக வழங்கப்படுவது உண்டு. அதே போல் இதர மதங்களின் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சான்றோர்கள் கொடை அளித்துள்ளனர். அதன்படி தஞ்சாவூர் மாவட்டம் திருநாகேஸ்வரம் ஊரில் இருந்த மிலாடுடையார் பள்ளியில் (சமணப் பள்ளி) திருச்சுற்றாலை மற்றும் கோபுரம் அமைக்கும் பொருட்டு, குமர மார்தாண்டபுரத்து பெருநகரத்தார்கள் இரண்டு நிலங்களில் இருந்து வரும் விளைச்சலை சுழற்சி முறையில் புதுக்குப்புறம் என்ற பெயரில் வழங்கியுள்ளனர். அதாவது இரண்டு நந்தவனங்களில் இருந்து வரும் விளைச்சலில், வருடத்திற்கு ஒரு நந்தவன வருவாய் என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் திருப்பணிக்காக எடுத்துக் கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்துள்ளனர்.

**வைத்தியப் போகம்:**

கோயில் தேவராயன் பேட்டை ஊரில் மத்தபுரீஸ்வரர் கோயிலில் முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் ஆழ்வார் ஸ்ரீபராந்தகன் குந்தவையார் என்பவர் இராஜகேசரிச் சதுர்வேதி மங்கலத்து சபையாரிடம் இருந்து ஒன்பது மா நிலம் மற்றும் ஒன்றே கால் அளவுடைய மனையையும் விலைக்கு வாங்கி, அதை மருகல் நாட்டு மதுராந்தகனுக்கன் மற்றும் அவர் குலத்தைச் சார்ந்தவர்கள் செய்யும் வைத்தியப் பணிக்காக, அவர்கள் அனுபவிக்கும் வகையில் வைத்தியப் போகம் நிலமாக கொடுத்துள்ளார். இந்த நிலத்திற்கு வரி நீக்கம் செய்யும் வகையில் மகா சபையார்கள் எண்பது காசுகளைப் பெற்றுக் கொண்டு இறை நீக்கமும் செய்து கொடுத்துள்ளனர்.

**காஷ்ட காரிப் பங்கு:**

சோழ மன்னன் பரகேசரிவர்மன் காலத்தில் கோயில் தேவராயன் பேட்டை மத்தபுரீஸ்வரர் கோயிலில் திருச்சேலூர் மகாதேவர்க்கு நடைபெறும் ஸ்ரீபலி வழிபாட்டின் போது இசைக் கருவி கொட்டும் ஐந்து நபர்களுக்கு, இவ்வூரின் மத்யஸ்தன் கற்பக ஆதித்யன் ஆச்சன் அமுதனக்கன் என்பவர் விலை கொடுத்து வாங்கிய அரையே நான்கு மா நிலத்தை தானமாக "காஷ்டகாரிப் பங்கு" என்ற பெயரில் தானமாக வழங்கியுள்ளார். இசைப் பணி செய்பவர்களுக்காக கொடுக்கப்பட்ட நிலம் என்று பெயர்.

**திருக்கைக்கொட்டி புறம்:**

திருவீழிமிழலைக் கோயிலில் உள்ள திருமுறையார் திருமேனிகள் என்று அழைக்கப்படும் நால்வர் முன்னிலையில் (அறுபத்து மூவர் சன்னதி) திருமுறைகள் உள்ளிட்ட திருப்பாட்டுப் பாடும் வழக்கம் இருந்துள்ளது. பொதுவாக திருமுறைகள் பாடும் போது கைத்தாலம் இட்டு பாடுவது மரபு. கைகளால் கொட்டி (தட்டுதல்) பாடுதல் என்ற அடிப்படையில் திருக்கைக்கொட்டி என்றும் அறியலாம். இந்த நிகழ்வின் பூசைகளுக்காக வழங்கப்படும் நிலங்களுக்கு திருக்கைக்கொட்டிப்புறம் என்று பெயர். சடையவர்மன் சுந்தர பாண்டியனின் **9**ம் ஆட்சி ஆண்டில் திருவீழிமிழலைக் கோயிலில் நின்று போன திருக்கைக்கொட்டி என்னும் திருப்பாட்டுப் பாடும் வழக்கத்தினை மீண்டும் ஏற்படுத்தி திருஅமுது, கறியமுது, விஞ்சினங்கள், திருபள்ளித்தாமம் உள்ளிட்டவைகள் படைக்க பல்வேறு பக்தர்கள் சேர்ந்து **12¼** மா, **6** மாகாணி, அரையே அரை காணி, **3** மாவரை அளவுடைய நிலங்களை திருக்கைக்கொட்டிப் புறமாக கொடுத்துள்ளனர்.

**விளக்குப் பட்டி:**

கோயிலில் விளக்கு எரிப்பதற்காக நிலங்கள் அல்லது ஊர்களை தானமாக வழங்குவது விளக்குப் பட்டி எனப்படும். திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு வேதபுரீஸ்வரர் கோயிலில் கிபி.**12**ம் நூற்றாண்டில் வெள்ளாளன் கேசவன் என்ற அத்தியூர் செல்வன் என்பவர் திருவேற்காடுடையாருக்கு நொந்தா விளக்கு எரிக்கும் பொருட்டு நிலத்தை பெருவிலை கொடுத்து வாங்கி கோயிலுக்கு விளக்குப் பட்டியாக கொடுத்துள்ளார். நிலத்தில் வரும் வருவாய் கொண்டு விளக்கு எரித்து, சந்திர சூரியர்கள் உள்ள வரை இந்த நிவந்தம் நடக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. விளக்கு எரிக்கும் இந்த நோக்கத்திற்காக வேறு சில கல்வெட்டுகளில் திருவிளக்குக் கட்டளை, திருவிளக்குக்குடி, திருவிளக்குப்புறம் என்ற பெயர்களிலும் நிலங்கள் நிவந்தமாக வழங்கப்பட்டுள்ளது.

**திருவேட்டைப்புறம்:**

விழுப்புரம் மாவட்டம் முன்னூரில் சோழ மன்னன் மூன்றாம் இராசராசனின் **10**வது ஆட்சி ஆண்டில் சிற்றரசராக இருந்தவர் அம்மையப்பன் சீயன் பல்லவாண்டான் இராஜநாராயண சம்புவராயன். இவர் முன்னூரின் ஊர்ச் சபையாரிடம் இருந்து விழுவூர் என்ற சிறிய ஊரில் ஒரு குறிப்பிட்ட நிலத்தை விலைக்கு வாங்கி ஆடவல்லீசுவரர் கோயிலுக்கு திருவேட்டைப் புறமாகக் கொடுத்துள்ளார். இந்த நிலத்தில் உள்ள இரண்டு மா நிலத்தின் வருவாய் கொண்டு சித்திரை மாதத்தில் வரும் ஆடவல்ல நாயனாரின் திருவேட்டைத் திருநாள் செலவுகளுக்காக மூலதனமாகக் கொடுத்துள்ளார்.

**பிரம்மதேயம்:**

பிராமணர்களின் சீவிதத்திற்காக மன்னர்களாலும், சபையார்களாலும் தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் அல்லது ஊர்களுக்கு பிரம்மதேயம் என்று பெயர். உத்திரமேரூர் மற்றும் மானூர்க் கல்வெட்டுகள் பிரம்மதேயங்களின் சிறப்புகளைப் பற்றிச் சொல்கின்றன.

**திருநாமத்துக்காணி:**

திருநாமத்துக்காணி என்பது கோயிலில் இறைவனின் பெயரிலோ அல்லது குறிப்பிட்ட சன்னதியின் இறைவர் பெயரிலோ நிலங்களை நிவந்தமாகக் கொடுத்து நான்கு புறங்களிலும் திரிசூலக்கல் நடப்படும். சேலம் மாவட்டம் ஆறகளூர் கரிவரதராசப் பெருமாள் கோயிலில், மன்னன் சுந்தரபாண்டியனின் **13**ம் ஆட்சி ஆண்டில் மன்னனின் ஆணைப்படி அவரது அண்ணனுக்கு ஏற்பட்ட கிரகணசாந்தி செய்யும் பொருட்டு சிங்கப் பெருமாளுக்கு அமுதுபடி, சாத்துபடி உள்ளிட்ட அணைத்துத் திருப்பணிகளுக்காகவும் **1000** குழி நிலத்தையும், அதனால் வரும் பொன் வரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் திருநாமத்துக்காணியாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்திற்கு இறை நீக்கமும் செய்யப்பட்டுள்ளது.

**திருவிடையாட்டம்:**

வைணவ கோயில்களுக்கு தானமாக வழங்கப்படும் நிவந்த நிலங்களுக்கு திருவிடையாட்டம் என்று பெயர். இதன்படி திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை ஊரில் உள்ள ஜகந்நாதப்பெருமாள் கோயிலுக்கு விஜய நகரப் பேரரசர் விருப்பன்ன உடையாரின் ஆட்சிக் காலத்தில் இரண்டாயிரம் வேலி நிலங்கள் திருவிடையாட்டமாக வழங்கப்பட்டுள்ளது. இதே போல் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்திலும் இந்த பெருமாளுக்கு நீலகங்கன் என்ற அதிகாரியால் மூன்றரை வேலி, இரண்டு மா நிலங்கள் திருவிடையாட்டமாக கொடுக்கப்பட்டுள்ளது.

**காணியாட்சி:**

ஒருவருடைய பணிக்கு ஊதியமாக அவருக்கு நிலத்தை தானமாக வழங்குவது காணியாட்சி எனப்படும். பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியனின் **13**ம் ஆட்சிக் காலத்தில் ஊருடைய முதலியான வீரபாண்டி சூடிக்கொடுத்த முதலி என்பவர் விக்கிரம பாண்டீஸ்வரமுடையார் கோயிலின் ஸ்ரீபண்டாரக் கணக்கராக பணி செய்ததால் அவருடைய பணிக்காக ஆன்மர் நாட்டு சோலைச்சேரி முடிவிளங்கு பாண்டிய குளப்பற்றில் ஒரு மா நிலம் காணியாட்சியாக கொடுக்கப்பட்டுள்ளது.

**குடிநீங்கா தேவதானம்:**

கோயிலுக்கு ஒரு நிலத்தை தேவதானமாக வழங்கும் பொழுது அந்த நிலத்தில் இருக்கும் மக்களை வெளியேற்றாமல், அவர்கள் தொடர்ந்து அங்கேயே இருக்கும் வகையில் வழிவகை செய்து தானம் வழங்குவது குடிநீங்கா தேவதானம் எனப்படும். பாண்டிய மன்னனின் மாமன் தொண்டைமானார் ராஜபாளையம் அருகே உள்ள உத்தம சோழபுரத்தின் விக்கிரம பாண்டீஸ்வர முடையார் கோயிலுக்கு நத்தமும், நத்தப் பாளும், தோட்டமும், தோட்டக் கொள்ளைகளும், குளமும், காடும், நன்செய், புன்செய் நிலங்களும் மரமும், கிணறு உள்ளிட்டவைகளை குடிநீங்கா தேவதானமாகக் கொடுத்துள்ளார்.

**திருவிழாப்புறம்:**

கோயில்களில் நடைபெறும் திருவிழா சிலவினங்களுக்காக நிலங்களை வழங்கி அதில் இருந்து வருவாய்களைக் கொண்டு திருவிழா நடைபெறும். இந்த நிலங்களுக்கு திருவிழாப்புறம் என்று பெயர். சோழ மன்னன் முதலாம் இராசராசனின் **16**ம் ஆட்சி ஆண்டில் திருவள்ளூர் மாவட்டம் கொரட்டூர் ஜம்புகேஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டின் படி ஏழு நாட்கள் திருவிழா நடத்தும் பொருட்டு, ஊர்ச் சபையினர் செம்பியன் மாதேவி ஈஸ்வரத்து ஆழ்வார்க்கு ஆறு மா நிலத்தை திருவிழாப்புறமாக விற்றுக் கொடுத்துள்ளனர். நிலத்தில் வரும் விளைச்சல் கொண்டு திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மடப்புறம்:**

துறவிகளுக்கும் அவர்கள் சார்ந்த மடங்களுக்கும் உணவு உள்ளிட்ட தேவைகளுக்காக தானமாக வழங்கப்படும் நிலங்களுக்கு மடப்புறம் என்று பெயர். இரண்டாம் சுந்தரபாண்டியனின் ஆட்சிக் காலத்தில் ராஜபாளையம் அருகே உள்ள பிராணன் காத்தருளிய சுவாமி கோயிலில் எனக்கு நல்லபெருமாள் மடம் என்னும் மடமொன்று செயல்பட்டு வந்துள்ளது. மன்னனின் ஆணைப்படி எனக்கு நல்ல பெருமாள் மடத்திற்கும், திருவாரூர் கோளகி மடத்திற்கும், உணவு மற்றும் பிற தேவைகளுக்காக **12** மா நிலம் மடப்புறமாக வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வரும் வரி உள்ளிட்ட வருவாய்களை கொண்டு மடத்தின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். திருவீதிமடப்புறம் என்ற பெயரிலும் இது போன்ற நிவந்த நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திருநந்தவனப்புறம்:**

கோயில்களில் இறைவர்க்கு சாற்றும் பூ உள்ளிட்ட மாலைகளுக்காக நந்தவனம் அமைக்க நிலங்களை கொடுப்பது திருநந்தவனப்புறம் ஆகும். மூன்றாம் குலோத்துங்க சோழனின் **37**ம் ஆட்சி ஆண்டில் சென்னை கோயம்பேட்டில் உள்ள குறுங்காலீஸ்வரர் கோயிலுக்கு கருப்புழான் என்பவருடைய மனைவி தேவாண்டாள் திருநந்தவனம் அமைக்க இரண்டு இடங்களில் மொத்தமாக ஆயிரம் குழி நிலங்களை விலைக்கு வாங்கி இறை நீக்கி தானமாகக் கொடுத்துள்ளார்.

**திருமடைப்பள்ளிப்புறம்:**

கோயில்களில் இறைவர்க்கு திருஅமுது செய்யும் இடத்திற்கு திருமடைப்பள்ளி என்று பெயர். இந்த திருமடைப்பள்ளியின் செயல்பாட்டுக்கு என நிலங்களை நிவந்தமாக வழங்குவது திருமடைப்பள்ளிப்புறம் ஆகும். விருதுநகர் மாவட்டம் மங்கலம் ஊரில் உள்ள ஆயிரத்தெண்மீஸ்வர உடையார்க்கு குளம் ஒன்றை குலசேகர சதுர்வேதி மங்கலத்து சபையினர் திருமடைப்பள்ளிப்புறமாக விற்றுக் கொடுத்துள்ளனர்.

மேற்கூறிய நிவந்த நிலக் கொடைகளை தவிர்த்து எண்ணற்ற தானங்களும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. ஆயினும் அவை அனைத்தையும் இங்கே குறிப்பிட இயலாது என்பதால் சில தானங்கள் மட்டும் தெரிந்து கொள்ளும் வகையில் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிவந்தப் புறங்கள்**:

நாமக்கல், திருச்சி, விழுப்புரம் மாவட்டங்களில் பிடாரிபட்டி என்ற பெயரிலும், அம்பாசமுத்திரம், மரக்காணம், சேத்துப்பட்டு உள்ளிட்ட ஊர்களுக்கு அருகே பிரம்மதேயம் என்னும் பெயரிலும், தேவதானம் என்னும் பெயரில் ராஜபாளையம், பொன்னேரி உள்ளிட்ட இடங்களிலும்,

மடப்புறம் என்னும் பெயரில் திருநெல்வேலி, மதுரை, சிவகங்கை, நாகப்பட்டினம் உள்ளிட்ட இடங்களில் இன்றும் பல நிவந்தப் பெயர்களைக் கொண்ட ஊர்கள் உள்ளன.

**முடிவுரை:**

அறமும் தவமும் பெருக வேண்டும் என்ற நோக்கில் தான் இறைவர்க்கும் இறைபணி செய்பவர்க்கும் தமிழ் சமூகத்து ஆன்றோர்கள் அளப்பரிய தானங்களை செய்துள்ளனர். நூற்றாண்டுகளுக்கு முன்னர் நவீன அறிவியல் வளர்ச்சிகள் இல்லை என்று தற்போதைய தலைமுறையினர் கூறினாலும் அறிவியலையும் கடந்த இயற்கை வாழ்வும், ஆன்மீகம் என்ற பெயரில் அனைவருக்குமான அடிப்படை வாழ்க்கையும், அவற்றை கண்காணிக்கும் நிர்வாக அமைப்புகளும் மக்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றியது. ஒரு கோயிலின் அன்றாட நடைமுறையில் அணைத்து மக்களும் ஏதோ ஒரு வகையில் இறை பணியாற்றி தங்களுக்கும், தங்களது வம்சத்தாருக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொண்டனர். நிவந்தங்கள் என்பது வெறும் வசதி சார்ந்த செயலாக இல்லாமல் கோயிலின் பூசைகளை உறுதிப்படுத்துவதோடு சமூக இயக்கத்தையும் மேற்கொண்டது. கல்வெட்டுகளில் நாம் காணும் நிவந்தம் சார்ந்த செய்திகளை நம்மால் அறிய மட்டுமே முடியும் என்பதை தவிர, அறிவியல் வளச்சி கண்ட நம்மால் அதை செயல்படுத்தவோ அல்லது அக்கல்வெட்டுகளை பாதுகாக்கவோ கூட முடியாது என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனினும் தமிழ் முதுகுடிகளின் அற்புத ஆளுமைத் திறமைகளை அனைவரும் அறிய வேண்டும் என்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**தரவுகள்:**

1. **விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - II , தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண்:34, 2009.**
2. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXX, திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.**
3. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - VIII, தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி-II, 2016.**
4. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXIV, விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-VI, 2025.**
5. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXII, செங்கற்பட்டு மாவட்டக் கல்வெட்டு தொகுதி-II, 2025.**
6. **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-XXXI, சேலம் மாவட்டக் கல்வெட்டு தொகுதி-I, 2025.**

**References:**

[1]. Viruthunagar District Inscriptions Volume-II, Tamilnadu Epigraphic Serial.No:34, 2009.

[2]. Tamilnadu Epigraphic volume -XXX, Tiruvallur District Inscriptions Volume -II, 2025.

[3]. Tamilnadu Epigraphic volume - VIII, Thanjavur Vatta Kalvettukal Volume-II, 2016.

[4]. Tamilnadu Epigraphic volume-XXIV, Viluppuram District Inscriptions Volume-VI, 2025.

[5]. Tamilnadu Epigraphic volume-XXXII, Sengarpattu District Inscriptions Volume -II, 2025.

[6]. Tamilnadu Epigraphic volume-XXXI, Salem District Inscriptions Volume -I, 2025.